செ.வெ.எண்:21/2017 நாள்:11.08.2017

# சிவகங்கை மாவட்டம்
## 445 கிராம ஊராட்சிகளிலும் சுதந்திர தினத்தன்று கிராம சபைக் கூட்டம் நடைபெறவுள்ளது.
## மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.சு.மலர்விழி,இ.ஆ.ப., அவர்கள் தகவல்.

சிவகங்கை மாவட்டத்திலுள்ள 445 கிராம ஊராட்சிகளில் சுதந்திர தினமான 15.08.2017 அன்று கிராம சபைக் கூட்டம் காலை 11 மணியளவில் நடைபெறவுள்ளது. கிராம பொது மக்கள் அனைவரும் இந்த கிராம சபை கூட்டத்தில் கலந்து கொண்டு பயனுள்ள முறையில் விவாதித்து தீர்மானம் நிறைவேற்றிட அனைத்து ஊராட்சி மன்றங்களுக்கும் தெரிவிக்கப்படுவதாக மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.சு.மலர்விழி,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**கிராம சபைக் கூட்டத்தில் கீழ்க்கண்ட பொருட்கள் குறித்து விவாதிக்கப்படவுள்ளது**

1) குடிநீர் சிக்கனமாக பயன்படுத்துதல்.
2) கொசுக்கள் மூலம் பரவும் டெங்கு காய்ச்சல் தடுப்பு நடவடிக்கைகள் குறித்து விவாதித்தல்.
3) கிராம ஊராட்சி வளர்ச்சித் திட்டம் - (VPDP)
4) அந்தியோதயா இயக்கம்.
5) கிராம ஊராட்சி நிர்வாகம் மற்றும் பொது நிதி செலவினம் குறித்து விவாதித்தல்.
6) சுகாதாரம்
7) மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம்
8) ஊராட்சிப் பகுதிகளில் நடைபெற்று வரும் பல்வேறு திட்டப் பணிகள் முன்னேற்றம் மற்றும் நிதி செலவின விபரங்கள் குறித்து விவாதித்தல்.
9) மகளிர் திட்டம்
10) இதரப் பொருள்கள்

::வெளியீடு::

செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,
சிவகங்கை.